உ
சிவமயம்





# அமரர்

# குட்டிப்பிள்ளை பரமலிங்கம்

(பரமு)

அவர்களின் அமரத்துவம் குறித்த

# "பரம பதம்"

14.04.2021

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# குட்டிப்பிள்ளை பரமலிங்கம் (பரமு)

அவர்களின்

அமரத்துவம் குறித்து ஆக்கப்பெற்ற

31ஆம் நாள் நினைவு மலர்

**14.04.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனிய தெய்வத்திற்கு சமர்ப்பணம்

எங்களோடு வாழ்ந்திருந்து
நாம் சிரிக்க தான் சிரித்து
நாம் அழுதால் விழிநீர் துடைத்து
வருவோர் யாவரையும் வாயார வரவேற்று
உள்ளங்கள் உவக்கும்
உபசரிப்புக்கள் பல செய்து
எல்லோர் இதயத்திலும் இடம்பிடித்து
உயிரெனும் ஆரமுதாய் இருந்து
பாதி வழிப் பயணத்தில்
எம்மைப் பரிதவிக்க வைத்து விட்டு
தனி வழியே சென்று விட்ட எங்கள்
தெய்வத்தின் பாதங்களுக்கு
இந் நினைவு மலர் சமர்ப்பணம்.
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



தோற்றம்
09
12
1937

மறைவு
15
03
2021

# அமரர்
# குட்டிப்பிள்ளை பரமலிங்கம்
# (பரமு)

## திதி வெண்பா

சார்வரி ஆண்டு சக்தியுறை பங்குனியில்
நீர்மைநிறை பங்குனித்திங்கள் நாள் – பூர்வபட்ச
துதியைத் திதியதனில் குட்டிப்பிள்ளை பரமலிங்கம்
பதிசிவனின் பதம் இணைந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்1 உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

## தேவாரம்

பித்தாபிறை சூடீ
பெரு மானே அருளாளா
எத்தான்மற வாதே
நினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தாஉனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ (து) இனியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்த முகமொன்றே
குன் றுருவ வேல் வாங்கி நின்றமுகமொன்றே
மாறுபடு சூரனைவ தைத்தமுகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ! மலிவளஞ் சுரக்க! மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்கள் ளோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக! உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

திரு. குட்டிப்பிள்ளை

பரமலிங்கம் (பரமு)

அவர்களின்

# அமரத்துவம் குறித்த நினைவுச் சுவடுகள்

" நெருதல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு"

என்பது வள்ளுவர் வாக்கு. நேற்று இருந்தவர் இன்று இல்லை என்று சொல்லும் இரங்கத்தக்க நிலையை உடையது இவ்வுலகம் என்பது அவர்தம் கருத்தாகும். அமரர் குட்டிப்பிள்ளை பரமலிங்கம் அவர்களின் மறைவை எண்ணிப்பார்க்கும் போது வள்ளுவன் வாக்கு முற்றும் உண்மை என்பதை நிதர்சனமாகக் கண்டோம். காலையில் இருந்தவர் மாலையில் மறைந்து விட்டார். இயற்கை அவரைப் பிரித்து விட்டது. அவரை நினைவு கூறும் இவ்வேளையில் அவரது வாழ்க்கைச் சுவடுகளை ஒரு கணம் மீட்டிப்பார்ப்போம்.

ஈழத்தின் வடபால் அமைந்துள்ள யாழ் மாவட்டத்தின் தென்மேற்குப் பக்கத்தே உள்ள நெடுந்தீவு எனும் ஊரைச் சேர்ந்த அமரர் திரு. குட்டிப்பிள்ளை, தாயார் சின்னத்தங்கம் தம்பதிகளுக்கு கனிஷ்ட ஆண் பிள்ளைச் செல்வமாக 1937ஆம் ஆண்டு மார்கழி மாதம் 9ஆம் நாள் இப்பூமியில் உதித்தார். தன்னுடைய உடன் பிறப்புக்களாக அன்னப்பிள்ளை, நாகம்மா, கந்தையா, இராமநாதர், நாகலிங்கம், பொன்னம்மா, தருமலிங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனம், பராசக்தி, இராசமணி ஆகியோருடன் ஒரு கூட்டுக்கிளிகளாக ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்தார். இவர் தனது கல்வியை நெடுந்தீவு கிழக்கூர் பாடசாலையில் கற்றார்.

தனது மணப்பருவத்தில் தன் மனம் விரும்பிய மங்கையான நெடுந்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் மாரிமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியான மகேஷ்வரி என்பவரை தனது பெற்றோர் சம்மதத்துடன் 1963ஆம் ஆண்டு தை மாதம் கரம் பிடித்தார். இருவரும் கருத்தொருமித்த தம்பதிகளாக அன்பையும், அறத்தையும் பேணி இல்லறம் எனும் நல்லறத்தை மகிழ்வுடன் தம்பனை எனும் ஊரில் நடாத்தி வந்தனர்.

தமது இல்லற வாழ்க்கையின் பயனாக வம்சத்தின் குலம் விளங்க நிர்மலாதேவி(சாந்தி), தர்மரட்ணம்(சாந்தன்), யசோதா, விஜிதா, அரவிந்தன்(இந்து), ரமேஷ்வரன் ஆகிய செல்வங்களைப் பெற்று அவர்களைக் கல்வியிலும், நற்பழக்க வழக்கத்திலும் சிறந்து விளங்க வைத்து சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அங்கு அவர் மிகவும் சிறந்த ஒரு விவசாயியாகவும் இருந்தார். பின்னர் சில காலம் தனது உடன்பிறப்புக்களுடன் உருத்திரபுரத்திலும் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் அவர் அங்கு மிகவும் அன்பாகவும், எல்லோரிடமும் மிகவும் பாசமாகவும், எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பான்மையுடையவராகவும் ஊர்மக்கள் போற்றும் நல்மகனாகவும் வாழ்ந்தார்.

சில காலம் தனித்து தனது குடும்பத்துடன் பிள்ளைகளின் கல்வி நிலையை மேம்படுத்த யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். அங்கு அவர் பிள்ளைகளின் கல்விக்காக அரும்பாடு பட்டு அவர்களை நல்நிலைக்கு கொண்டுவந்தார். அவரின் தீராத முயற்சியின் பயனாக சிரேஷ்ட புதல்வன் சாந்தனை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்து அவரின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு மருமகளாக நீத்தா என்பவரை மணமுடித்து வைத்தார். அவர் வெளிநாடு சென்ற சிறிது காலத்தில் தனது மூத்த மகளான சாந்திக்கு நல்ல வரன் பார்த்து நல்மணாளன் ஆன சுமித்திரனை மணம் முடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதற்கு சுவிட்சலாந்துக்கு அனுப்பிவைத்தார். அத்துடன் அவரின் இரண்டாவது மகளான யசோதாவுக்கு பொன்னவராஜன் என்பவரை யாழ்ப்பாணத்தில் அவர்களின் விருப்பத்திற்கிணங்க திருமணம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அவரின் கடைக்குட்டி செல்ல மகளான விஜிதாவையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து அவர்களின் விருப்பப்படி வாழ்க்கைத்துணையாக தவக்குமார் என்பவரை மணமுடித்து வைத்தார்.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து கொழும்பு சென்று தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வாழ்ந்தார். அங்கு தனது மகன் அரவிந்தனுக்கு யாழினி எனும் மருமகளை கரம் இணைத்து வைத்ததுடன் அவர்களுடைய பிள்ளைகளைச் சீராட்டி, அன்பு மொழிபேசி அவர்களுடன் மகிழ்ச்சியாயிருந்தார். தனது இறுதிக் கடமையாக அவரது குட்டி மகன் ரமேஷ் உடன் சிறுது காலம் மலேசியாவில் இருந்து அவருக்கும் பிரியதக்ஷி எனும் மருமகளை மணம் முடித்துக் கொடுத்து விட்டு மீண்டும் இலங்கை திரும்பினார். இலங்கை திரும்பியவர் சிறிது காலம் தமது கொழும்பு வீட்டில் ஓய்வு எடுத்தார்.

அவர் தம மண்மீது கொண்ட பற்றினை நன்கறிந்த அவரின் கடைசி செல்ல மகளான விஜிதா அவர்கள் பெற்றோரின் ஆசையை நிறைவேற்றும் வண்ணம் அமைத்துக் கொடுத்த திருவையாற்று வீட்டுக்கு வந்து தனது இறுதிக் காலத்தை தன் மனைவியுடன் மிக மகிழ்ச்சியாகக் கழித்து வந்தார். இங்கு அவர் தன் மனைவியுடன் சேர்ந்து ஊர் மக்கள் போற்றும் ஒரு கோயில் போல தமது வீட்டையும், வீட்டுத்தோட்டத்தையும் சிறப்புறப் பராமரித்து தென்னை, வாழை, கமுகு, பூச்செடிகள் என அனைத்தையும் ஒரு சோலை வனமாக வைத்திருந்து தமது ஓய்வு காலத்தை பயனுறக் கழித்து வந்த நிலையில் காலனவன் தன்னைக் கூட்டிச் செல்ல போகின்றான் என்பதை அறியாமல் தனது மூத்த சகோதரனின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு அரப்பு வைத்து அண்ணனின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தனை செய்து விட்டு வீடு திரும்பிய சில தினங்களில் நோயின் பிடியில் விழுந்தார். சுவாசநோய் காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலையிலும், பின் யாழ் போதனா வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அன்னார் சிகிச்சை பெற்று நறசுகத்துடன் வீடு திரும்புவார் என்று எண்ணி எண்ணி நாட்கள் பன்னிரண்டு கடந்த நிலையில் மீண்டு வருவார் என்று இன்புற்று இருக்கையில் பேரிடியாய் வந்தது. திங்கட்கிழமை (15.03.2021) மாலை நான்கு முப்பத்தைந்து நிமிடமளவில் சதிகார காலனின் பாசக்கயிறு எங்கள் குல தெய்வத்தை எங்களிடம் இருந்து பறித்த செய்தி! கதறினோம், கலங்கினோம், கண்ணீர் விட்டோம், செய்வதறியாது திகைத்து நின்றோம் விதி செய்த சதியால் அன்று எங்கள் குடும்பத்தின் ராஜகோபுரத்தை இழந்து ஆறாத்துயரில் இருந்து மீளாது இன்றும் தவித்துக் கொண்டு இருக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**பணம் சம்பாதிக்க ஆயிரம்**
**கஷ்டப்பட்டாலும்,**
**அவமானப்பட்டாலும் அதை**
**மனதோடு வைத்துக் கொண்டு**
**புன்னகையால் குடும்பத்தை நடத்தும்**
**ஒவ்வாரு ஆணும் புனிதமானவனே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் உள்ளத்திலிருந்து.....

என் வாழ்வின் முதல்வனே!
என் வாழ்வின் நாயகனே!
என் வாழ்வின் அத்திவாரமே!
என் வாழ்வின் குலதெய்வமே!
எங்கு சென்றீர் என்னை விட்டு விட்டு?

என் நெஞ்சம் வலிக்கின்றது.
என்னைத் துடிக்க விட்டு
இத்தனை தூரம் போய்விட்டீர்களே!

ஆறு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று
சந்தோசமாக வாழ்ந்தோமே!
அவர்கள் கூட என்னைப் பிரிந்தாலும்
நீங்கள் என்னை விட்டு பிரிந்ததில்லையே!
ஏன் இன்று மட்டும் என்னை
தனியே தவிக்க விட்டு சென்றீர்கள்?

எக்கணமும் எனைப் பற்றியே சிந்திப்பீரே!
இக்கணம் என்னை மறந்து சென்றதேனோ?
சத்தம் இன்றி உறங்கி விட்டீர்!
என் தூக்கம் பறித்து விட்டீர்
ஆனாலும் என் மனதில் உங்கள் குரல்
ஒலித்துக் கொண்டே இருக்கும்..........

மனைவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா நிழற் படங்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் சாந்தனின் புலம்பல்

அன்புத் தந்தையே!
ஓடிவர முடியவில்லை
பறந்து வரவும் முடியவில்லை
உங்களை கடைசியாக பார்க்கவும் முடியவில்லை
இன்று பாவியானேன்- பரிதவித்து நிற்கின்றேன்

போன தடவை வந்தபோது
கைபிடித்து நடந்ததும்
கதை, கதையாய் சொன்னதும்
அடுத்த வருடம் வா என்று
வழியனுப்பி வைத்தீரே - உங்களை
வழியனுப்ப வரமுடியவில்லையே
வாடிப் போனதே என்மனம்

காலத்தின் கோலம் கொரோனா உலகில் இன்று
காலன் இந்நேரம் களவாடிச் சென்றதேன்?
தம்பி என்ற குரல் கேட்குதய்யா என்னுள
இனியார் எனை அழைப்பார் தம்பி என்று

கொள்ளிக்குடம் தூக்கவுமில்லை
கொள்ளியும் போடவில்லை
வெந்து போனேன் அப்பா
வெறுப்பாயிற்று வாழ்வை எண்ணி
நீங்கள் பாடிய பாடல்கள் எல்லாம்
பல கதைகள் சொல்லுதப்பா
பாவிமகன் நான் இங்கு பரிதவிக்கின்றேன்
பாசமான தந்தையின் பிரிவுத் துயர் தாளாது

அன்னமூட்டிய கைகள் வேண்டும்
அதட்டிய அதிகாரக் குரலும் வேண்டும்
அரவணைக்க அப்பா நீங்கள் வேண்டும்
எங்கு சென்று தேடுவேனோ?
எமை விட்டுப் போனதேனோ?
வலிக்கின்றது அப்பா என மனம் தினம் வலிகின்றதப்பா!

**சாந்தன் (மகன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள்மாரின் மனத்துயரம்.....

ஒரு காவியம் தனது
கடைசி அத்தியாயத்தை
முடித்துக் கொண்டதோ!

விழுதுகளை விசும்ப வைத்து விட்டு
ஒரு ஆல விருட்சத்தின் ஆணிவேர்
அறுந்து போனதோ!

பசியால் அழுத எம்மை
உணவூட்டி வளர்த்தவரே!
உமது பிரிவால் அழுகின்றோம்.
திரும்பி இங்கு வந்துவிடுங்கள் அப்பா.
உணவுடன் சேர்த்து
உறவையும் ஊட்டி வளர்த்தவரே!
மரணம் உம்மை வென்று
தீ உங்களைத் தின்ற போது
தடுக்க முடியவில்லையே - அப்பா
சாவை எதிர்க்க முடியவில்லையே - அப்பா

ஓடி வர நினைத்தோம் பல தடவை
ஆயினும் நாடி வர முடியவில்லையே
உமதடிக்கு இந்த பாதகன் கொரோனாவால் -அப்பா
உமது விழிக்குள் எம்முகம் காணமுன்
உம் விழிக்கு திரைபோட்டது யாரு - அப்பா
தரணி காண வளர்த்தவரே
தனிமையில் போனதெங்கே?

சாந்தி, யசோ.
(மகள்மார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்ன கதை சொல்ல அப்பா
உங்கள் சிறகில் ஆறு பிள்ளைகளையும்
அழகாய் மூடி வளர்த்த கதை சொல்லவா?

கனவிலும் நினைக்கவில்லை காலம் உங்களை
என்னிடம் இருந்து பிரிக்கும் என்று அப்பா!

எத்தனை கதைபேசினோம் அப்பா!
இன்னமும் பேச இருக்கின்றது
வந்து பேசலாம் வா மகளே என்றீரே அப்பா!
அப்பா உங்கள் விஜிக்குட்டி வந்திருக்கின்றேன்.
வா மகளே என அழைக்க மாட்டீர்களா? அப்பா!

அப்புவும் ஆச்சியும் உங்களைப் பத்திரமாகப் பார்ப்பார்கள்
என்ற நம்பிக்கையுடன் என் மனதைத் திடப்படுத்தி
நாங்கள் எங்கள் அம்மாவைப் பார்த்துக் கொள்கின்றோம் அப்பா
என்றும் எங்கள் அன்பின் சிகரமாய்
எங்களுடன் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள் அப்பா!

ஆசை மகள்
விஜிதா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் என் வாழ்வில் அப்பா.....

அன்பை மட்டும் ஊட்டி வளர்த்தவரே!
அப்பா என்ற சொல்லுக்குள் கட்டிப்போட்டு வைத்தவரே
எங்கே அப்பா நீங்கள்?

நான் தேடித் தவிக்கின்றேனே!
என்னை இயக்கிக் கொண்டிருந்த என்குலசாமி
இன்று எங்கே அப்பா நீங்கள்?

உங்கள் கைவிரல்களைப் பிடித்து நான் நடந்த அந்த
நினைவுகள் என் கண்முன்னே வந்து போகுதே என் அப்பா!

அப்பா ஒரு நாள் கூட உங்களுடன் பேசாமல் இருந்ததில்லையே!
இன்று ஏன் மௌனமானீர்கள்?

அப்பா பூ போன்ற உங்கள் மேனி வலிக்கின்றது என்று
சொல்லும் போது என் இதயம் படபடத்துக் கிடந்ததே அப்பா

என் செல்ல அப்பா எதையுமே தாங்க மாட்டீரே!
நான் கதறினேனே என் அப்பா!
என்னால் காலத்தை வெல்ல முடியவில்லையே அப்பா
இயற்கையின் நியதி என்னை உங்கள் பக்கத்தில்
நிற்க விடவில்லையே அப்பா

என் குலசாமி அழகாக சிரித்தபடி எங்கள் வீட்டில்
அமர்ந்திருந்த நாட்கள் இனி வராதா அப்பா?

அப்பா நீங்கள் இல்லாமல் இன்று எதுவுமே
நன்றாக இல்லையே அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனின் பாசப்பரிவில்

எங்கள் குல மாணிக்கமே அப்பா!
என்னை விட்டு எங்கு சென்றீர்?
கனவிலும் எண்ணவில்லை சடுதியாய் மறைந்து விட்டீர்

உங்கள் தோட்டத்து தென்னை, வாழை, கமுகு
உங்கள் குரல் கேட்காது வாடி நிற்கின்றதே!
குரல் கொடுக்க வாருங்கள் அப்பா!

புன்முறுவலுடன் பொறுமை தந்து
பண்புதனை எமக்களித்தவரே - அப்பா!
உங்களை இனி எங்கு எப்போ காண்போம்
நீங்கள் மறைந்து விட்டீர்கள் என்பதை
இன்னமும் நம்பமுடியவில்லையே!

இன்னும் சில காலம் என்னுடன் இருப்பீர்கள என
எண்ணி மகிழ்ந்தேனே! ஆனால் நோய் என்ற
கொடியவன் உங்களை என்னிடம் இருந்து
பறித்து விட்டானே! ஆயினும்
எனது துன்பத்தை அடக்கி உங்கள்
ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
மாணிக்கப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

மகன்
இந்து (அரவிந்தன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் ரமேஷ்வரனின் கண்ணீர்த்துளிகள்

இறைவனால் எமக்கு கிடைத்த
இனிய செல்வம் நீங்கள் அப்பா.
தவமின்றி கிடைத்த அன்புப் பொக்கிஷம் நீங்கள் - அப்பா

எம்மைச் சீராக வளர்த்தவரே
கல்விச் செல்வத்தை எமக்குத் தந்தவரே!
நாம் கேட்காமலே எம் தேவையறிந்து
சலிக்காமல் நிறைவேற்றியவரே!

எந்தக்குறையும் உங்களிடம் நாம்
எப்போதும் கண்டதில்லையே! அப்பா
என்ன நடந்தது அப்பா?

உங்கள் ஆசைகளை நிறைவேற்றினோமே
நீங்கள் கேட்கும் அனைத்தையும்
உங்களின் மகிழ்விற்காக செய்தேனே.

நான் செய்தது போதுமென்று நினைத்தோ
எம்மிடம் இருந்து சென்று விட்டீர் அப்பா
மீண்டும் ஒரு ஜென்மம் இருந்தால்
உங்கள் மகனாகப் பிறக்கும்
வரம் வேண்டும் அப்பா.

**மகன்**
**ரமேஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன்மாரின் கண்ணீர்த்துளிகள்

ஆலமரமொன்று அடி சாய்ந்ததோ?
வேரோடு விழுந்து விட்ட விருட்சமே!
எம்மைப் பாதியிலே தவிக்க விட்டதேனோ?

எம் உயிரிலும் உயிரான உயிரை
எம்மிடம் இருந்து பிரித்தது யார்?
இப் பிறவியில் அல்ல எப்பிறவியிலும்
யாம் காணோம் உம்மைப் போன்ற அருமை மாமாவை.

இனி எப்போது உம்முகம் பார்ப்போம்
இப்பூமியில் மாமா
எனினும் நீங்கள் மீண்டும் பிறப்பீர்கள்
என்று அமைதியாகின்றோம்.

மருமகன்மார்



நீ தனிமையில்
இருக்கும் போது
உனக்கு என்ன மாதிரி
சிந்தனைகள்
தோன்றுகின்றதோ
அதுதான் உன்
வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் நீத்தா புலம்பல்

வெள்ளை வேட்டி கட்டி
வீர மீசை வைத்து
வாரித் தலை இழுத்து
வலுவான நடை போட்ட
மாமனிதர் என் மாமா

ஆறு பிள்ளைகளைப் பெற்று
அன்புடனே வளர்த்தெடுத்து
வந்தவர்களையும் வாழவைத்து
நல்வழி நடத்திய நாட்டாமை
என் மாமா

ஊரின் அருமை கூறி
உற்றார் உறவினர் பெயர் கூறி
அவர்கள் பெருமை சொல்லி அறிமுகப்படுத்திய
கலங்கரை விளக்கு என் மாமா

சுடு சொல் சொன்னதில்லை
சும்மாவேனும் கோபித்ததுமில்லை
பிறர் பிழையேதும் கண்டதில்லை
நான் கண்ட அதிசய பிறவி என் மாமா

ஈரேழு ஜென்மமும்
என் கணவர் வேண்டுமென்பேன்
என்னவனை எனக்குத் தந்த
அன்புத் தெய்வம் என் மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு திரும்பணும்
உங்கள் நல்லாசி வேண்டும் என்றேன்.
ஏன் இந்த அவசரம் எமை ஏமாற்றி
சென்றதேன் என் மாமா

பிறை இல்லா இரவு போல
வாசம் இல்லா மலர் போல
தெய்வம் இல்லா கோயில் போல
தென்றல் இல்லா சோலை போல
ஆகிப்போனதே உங்கள் வீடு
என் மாமா

இயற்கையும் இன்னிசையும் உள்ளவரை
பாவாடை தாவணி பாடல் கேட்கும் வரை
எம் உள்ளம் எனும் கோவிலில்
என்றும் அணையா தீபம்
என் மாமா.

நீத்தா
(மருமகள்)

**கனவு காணுங்கள் - ஆனால்
கனவு என்பது
நீ தூக்கத்தில்
காண்பது அல்ல - உன்னைத்
தூங்க விடாமல்
பண்ணுவது எதுவோ
அதுவே (இலட்சியம்) கனவு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தை கவர்ந்த என் மாமா!

உங்கள் துடிப்பு நின்றாலும்
உங்கள் குரல் ஓய்ந்தாலும்
உங்கள் கதிரை வெற்றிடமானாலும் - வீட்டில்
உங்கள் இருப்பிடம் வெறிச்சோடி விட்டாலும்
உங்கள் அன்பும் துடிப்பும் திறந்த மனமும்
நீங்காது நிலைத்து இருக்கும் என் நெஞ்சில்.

உங்கள் அன்பு மகன அரவிந்தனைக் கைப்பிடித்த
காரணத்தால் என் மாமா ஆனவரே - ஆனாலும் நீங்களும்
எனக்கு ஓர் தந்தை தானே அப்பா
மருமகள் என்று என்னை ஒரு போதும் நினையாது
மகள் போல் அரவணைத்துப் பார்த்தீர்கள்.
அவசரம் தேவை என்று ஓடி வந்தால் அவதிப்பட்டு
என் குறை தீர்ப்பவரே!

பேரப்பிள்ளைகளில் அதிகம் பாசம் வைத்து வளர்ததீர்களே!
பிஞ்சு அவன் பிறந்தநாளுக்காய் கடைசி ஆசையாய்
சைக்கிள் தனை வாங்கித்தந்தவரே!
அவன் அதை ஓட்டுவதைப் பார்க்காமல் விண் உலகம்
சென்று விட்டீர்களே அப்பா!
தவிக்கின்றோம் அப்பா மீளாத்துயரிலே இன்னும்
எங்கள் நெஞ்சம் ஏற்கவில்லையே
உங்கள் மறைவினை அப்பா.

யாழினி
(மருமகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் பிரியதக்ஷியின் உள்ளக் குமுறல்கள்

அப்பா என்று செல்லமாக அழைத்தோமே!
மலர்ந்த முகத்துடன் என்றும்
மகிழ்வுடன் வாழ்ந்தவரே!

உறவு சொல்லி வாழ்ந்தவரே!
பலருக்கு உதவிக்கரம் நீட்டியவரே!
எப்போதும் போன் எடுத்தால்
"ஆத்தை என்ன செய்கின்றீர்கள்"
என்று கேட்பீரே!

வீட்டுக்கு வாருங்கள் நல்ல கறி
சமைத்து உண்போம் என்பீரே!
நீங்கள் நலமாய் வீடு வருவீர்
என்று நினைத்தோமே!

விழி மூடி வீடு வருவீர் என
கனவிலும் நினைக்கவில்லையே!
காலனோ உங்களைக் கவர்ந்து
சென்று விட்டானே!
நாமும் நீங்கள் மீண்டும் வருவீர்
என்று இங்கு விழித்து நிற்கின்றோமே!

பிரியதக்ஷி
(மருமகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் வார்த்தை வரிகள்

பேரப்பிள்ளைகள் எமக்கு
பேரன்பைத் தந்தீர்.
உங்கள் மடியில் இருக்கும்
வரத்தைத் தந்தீர்.
எங்கே போனீர் எம்மை விட்டு?

உம் கை பிடித்து நடந்து வர ஆசை
உம் காதுகளைப் பிடித்துப் பார்க்க ஆசை
உங்களோடு சேர்ந்து உங்கள்
தோட்டத்தை வலம் வர ஆசை
உங்கள் வீட்டுப் படிக்கட்டில் இருந்து
பழைய கதை கேட்க ஆசை

ஆசை ஆசை எண்ணற்ற ஆசை
எமது ஆசை இனி எப்போது
நிறைவேறும்? உம்மைக் காணாமல்.
எங்கே போனீர்கள் எம்மை விட்டு?
வாருங்கள் மீண்டும்
எமது ஆசையை நிறைவேற்றுவதற்கு.

**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Thaththa

We have had our own experiences
With our thaththa, but the bond
Shared by our mothers and her father
Is somthing of a fantasy

When our mother comes to visit
He has a child like enthusiasm
And a determination to satisfy
All of her Wishes, forming a bond
with her that began the moment

He held her in his arms
A connection that nursed him
Back to health whenever
His daughter came to visit

A father who supported
His children form thousands of miles
Away was always a great
Inspiration for them to keep going
And as his grand kids we owe it to
Him to fullfil that duty

We will cherish the small
Sweet moments we have had
With our grandfather but will
Always regret not spending more
Time with the person who treaded
Our mother as if she were a treasure



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

These past few week of
His absence has shown to us that
His soul and good will will live
Amougst each of his kids and family
Members. though we may see his
Departure as a neverending wound

It is rather his memories
That will continue to live
With us forver none will
forget that he is not with us all
but every good deed that
we do is a reflection of our
thaththa who is within us

If we had one wish it will
Be to see our mother embrace
Her father one more time
Our definition of pure life and
Love in one moment

**Aravin & Keerthana**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் சஞ்சீவ், சாருவின கண்ணீர் வரிகள்

அப்பப்பா! வாழைப்பழம் இருக்கு வாங்கோ என்றீங்க
நெடுந்தீவில் குதிரை பார்க்கலாம் என்று சொன்னீங்க
நண்டு நிறைய வாங்கலாம் என்று சொன்னீங்க
நீங்க இப்ப எங்கே போனீங்க?

மாம்பழம் பழுக்குது வாஙகோ என்று சொன்னீங்க
எங்களைப் பார்க்கணும் என்று சொன்னீங்க
கட்டாயம் வாங்கோ என்று சொன்னீங்க
இப்ப எங்கே போனீங்க?

சாருவை சாந்தி, விஜி போல் என்று சொன்னீங்க
சஞ்சீவை இந்து போல் என்று சொன்னீங்க
நீங்கள் எங்கள் வம்சம் என்று சொன்னீங்க
உங்கள் வம்சம் அழுகின்றோம்
நீங்கள் இப்ப எங்கே போனீங்க?

சின்னச் சின்னச் ஆங்கிலம் சொன்னீங்க
நிறைய தெரியும் மறந்துவிட்டேன் என்றீங்க
தமிழ் படிக்கணும் என்று சொன்னீங்க
தமிழ் கதைக்க வாரோம் அப்பப்பா
இப்ப நீங்கள் எங்கே போனீங்க?

அம்மா அப்பா சொல் கேட்கணும் என்றீங்க
நல்ல பிள்ளைகளாக இருக்கணும் என்று சொன்னீங்க
நல்லா சாப்பிட்டு நல்லா படிக்கணும் என்று சொன்னீங்க
உங்கள் சொல் கேட்டோமே
நீங்கள் மட்டும் எங்கள் சொல் கேட்காமல்
இப்ப எங்கே போனீங்க?

**சஞ்சீவ், சாரு**
**(பேரப்பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரிகளின் வலிகள்

எங்கள் உடன்பிறப்பே!
எமது அன்பு சகோதரனே!
"பரமு" என்று அழைக்க
உரிமையுடயவனே என்றும் அம்மாவின்
கடைக்குட்டிச் செல்லமே

உன் குடும்பத்தின் மகிழ்வைக்
கண்டு வாழ்ந்தவனே!
தன் கடமையைச் சரிவர ஆற்றியவனே!
உன் புன்னகை கண்டு மகிழ்ந்தோமே

நோயின் பிடியில் வாடிய போது
ஓடிவந்தோமே
உன் குரல் கேட்க ஏங்கி நின்றோமே
ஏன் மௌனமானாய் எம் அருமை சகோதரனே?

சகோதரிகள்

**நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும்**
**எப்போதுமே மண்டியிடுவது இல்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உணர்வின் இறுதி வரிகள்

அறிவுரை கூறுவதில் நல் ஆசானாகவும்
அரவணைப்பில் தந்தையாகவும்
இன்ப துன்பத்தில் தோழனாகவும் உணர்த்தி
தளராத நெஞ்சுறுதி, தவறாத வாக்குறுதி
பேச்சிலே இனிமை, மனதிலே தூய்மை காட்டி
உடலாலும் மனதாலும் அன்பு செலுத்தி
நேரம் தாழ்த்தாமை உபசரிப்பு என்ற சொல்லின்
அர்த்தத்தை உணர்த்திய எங்கள் வீட்டின் கதாநாயகனை
எமக்காகப் பெற்றெடுத்த பெற்றோருக்கு என் நன்றிகள்.

முதுமையிலும் நிறம் மாறாத தலைமுடியும்
நரைத்த மீசையும் வெளுத்த ஆடையும்
சிவந்த மேனியும், நிலவொளி போன்ற முகமும்
நிமிர்ந்த நேரான நடையும், கம்பீரமும் என் நாயகனுக்கு
உரித்தான தோரணை

சிறிய நீல நிறம் கலந்த கண்களால்
பார்க்கும் பார்வையும் சிவந்த மெல்லிய இதழ்களுடாக
பூக்கும் புன்னகையும் பல அர்த்தங்களை விளங்க வைத்து
காலங்களுக்கு ஏற்ப எவ்வாறு வாழ வேண்டும்
என கற்றுக் கொடுத்து ஒரு செயலை
எவ்வாறு செய்து முடிக்க வேண்டும் என்று நினைக்கிறீங்களோ
அப்படியே செய்து முடிக்கும்
எங்கள் வீட்டு பெரிய சிங்கம் உங்கள் காலத்தை
முடித்துக் கொண்டது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பல இருந்தாலும்
என் இதயம் தேடிய
பாதுகாப்புப் பெட்டகத்திற்காக
நீங்க முடியாத நினைவுகளுடன்
வார்த்தைகள் இன்றி என் கரம் பிடித்து
நீங்கள் நடந்த இடம் முழுவதும் கொட்டி வைக்கின்றேன்
என் அன்பை நான் மறைந்த பின்பும்
மீண்டும் சேர்க்கும் என் நினைவுகளை
உம்முடன் அதுவரை என் பாதை முழுவதும்
என் தோழனின் கால் தடம் என்னுடன்.......

பேத்தி
தீபா

## வெற்றி உன்னிடம்

கஷ்டம் வரும் போது
கண்ணை மூடாதே
அது உன்னைக் கொன்றுவிடும்
கண்களை திறந்து பார்
நீ அதை வென்று விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம் கரம் பிடித்த நாள் முதல் நீர் என் கரம் பிடித்த நாள் வரை

## இரும்பனை உறுதிகொண்டு உயர்ந்திடும் பரமன்

01.ஆணிற்கு தேவையாம் அதிலும் முதல் எழுத்தாம்
(பலம்)

02. வீரத்திற்கு சொந்தக்காரணாம் அதிலும் நடு எழுத்தாம்
(வீரம்)

03.இவ்விரண்டையும் சுமப்பதற்கு தேவையாம் அதனிலும் முதலெழுத்தாம்.
(மனோபலம்)

04.அரவணைப்புக்கு அர்த்தக்காரணாம் அதிலும் நடு எழுத்தாம்.
(அன்பு)

இச் சொற்களுக்கே உரிமைக் காரணாம் பரமன் என்னும் என் தாத்தா பரமலிங்கம்

மேவிய தலைமுடி கலையாயின் நோக்கும் பார்வையில் கட்டளை உணர்த்துவாயின், சொல்லிற்கே அழகு சேர்க்கும் கம்பீர குரலாயின், பரந்த தோள்களை உடையவராயின், அஞ்சாத நெஞ்சம் கொண்டவராயின், திடமான இடுப்பை உடையவராயின், விழுது போன்று ஊன்றி நிற்கும் உமது கால்களாயின் அடுக்கு மாறாத நடையின் தோரணையும் உமது கரம் பிடித்து நடை பழகி தோள் சாய்ந்து மார்பில் உறங்கியதால் உம் தனித்துவத்தை என்னுள்ளே உணர்ந்தேன்.

பேரன்
கபில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவர்களின் அபரக்கிரியைகள் பற்றிய சில குறிப்புக்கள்

உலகில் அனைத்து மதங்களுக்கும் அவர்களைச் சார்ந்த மதங்களுக்கேற்ப ஒருவரின் மரணத்தின் பின் கிரியைகள் இடம்பெறுகின்றன.

சைவ சமயத்தை சார்ந்த எமக்குத் தனித்துவமான இதய சுத்தியுடன் கூடிய, பல சமயச் சடங்குகள் கிரியைகள் நடைபெறுகின்றன. இவற்றின் உண்மை விளக்கங்களை முற்றும் முழுதுமாக விரிவாகத் தரமுடியாவிட்டாலும், முக்கியமான சிலவற்றை இறந்த ஒருவரின் ஆன்மா ஈடேற்றத்துக்காக இப்பகுதியில் தரலாம். இதைச் சைவர்களாகிய நாங்கள் பின்பற்றுவது போற்றுதற்குரிய தர்மம் என்றால் அது மிகையல்ல. இவற்றைப் பயபக்தியுடன் நாம் கைக்கொள்வதால் எமக்கும் நிறைந்த ஆத்ம திருப்தி உண்டு.

**ஒருவரின் மரணத்தின் பின் இடம் பெறுவது பின்வரும் கிரியைகள்:**

1. தகனக் கிரியைகள்
2. காடாற்று
3. எட்டாவது நாள் கிரியை
4. அந்தியேட்டி அதாவது கல்லெடுப்பு
5. சபிண்டீகரணம் (வீட்டுக்கிரியை)
6. ஆட்டைத்திவசம்
7. வருட சிரார்த்தம் எனப்பிரித்துச் சுருங்கக் கூறலாம். இவற்றை இன்னும் விரிவுபடுத்தியும் கூறலாம்.
8. புரட்டாதி மாத மஹாளயம்

எவரொருவராவது வயது முதிர்ந்தோ அல்லது நோய்க்கு ஆளாகியோ மரணப்படுக்கை பாவங்களிலிருந்து விடுபட்டு மோட்ச இன்பப் பேற்றை அடைவதற்காகப் பசு தானம் செய்யப்பட வேண்டும். இதனை உத்திராந்தி தானம் எனக்கூறுவார்கள். உயிர் உடலை விட்டுப் பிரியும்போது செய்யும் கிரியையாகும். தேவார திருமுறைகளையும் ஓதவேண்டும். அவருக்கு திருநீறு அணிந்து பால் அல்லது ஏதாவது புண்ணிய தீர்த்தம் பருக்கி காதில் பஞ்சாட்சர மந்திரம் ஓத வேண்டும்.

ஒருவர் மரணமடைந்துவிட்டால் அவரைக் குளிப்பாட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைகள் அணிவித்து தர்ப்பைப்புல் பரப்பி தெற்குப்பக்கமாகத் தலையைக் கிடத்தல் வேண்டும். தலைமாட்டுப்பக்கம் விளக்கேற்றி வைத்தல் மிக முக்கியம்.

## மரணச்சடங்கு

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே கிரியை செய்தல் வேண்டும். தந்தைக்கு சிரேஷ்ட புத்திரனும், தாயாருக்கு கனிஷ்ட புத்திரனும் கிரியைக் கடமைகளைச் செய்யும் வழமையும் உண்டு. புத்திரர்களைத் தவிர்ந்த பின்வருவோரும் செய்யலாம். மனைவி, மகள், தமையன், இளையசகோதரர், சகோதரன், தன் புதல்வன், பிதா , தாய், மருமகன், சகோதரி தம் புதல்வன், சீடன், குரு, மகள் கணவன், தோழன், எனக் கூறப்படுகின்றது. பிரதானமானவர் இல்லையாகில் இவ்வரிசைக் கிரமத்தில் புத்திரன் அல்லாத ஒருவர் கர்த்தாவாகக் கிரியை செய்வதாகில், அவர் தனது பெற்றோருக்கு எவருக்காவது ஒருவருக்குக் கிரியை செய்தவராக இருத்தல் வேண்டும்.

புத்திரர் இங்கில்லாத காரணத்தினால் மரணக்கிரியை வேறு ஆசௌச வழியிலுள்ளவர் ஒருவர் செய்தால் புத்திரர் பின்னர் வருவராகில், எஞ்சிய கிரியைகளைப் புத்திரர் செய்யலாம். அதேபோல் புத்திரர் மரணக் கிரியைகளை செய்து மற்றைய கிரியைகளுக்கு நிற்க முடியாதவிடத்து வேறு ஒருவர் கர்த்தாவாக நின்று செய்யலாம். ஆனால் ஆரம்ப கிரியைகளிலும் இவரும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அந்தியேட்டி , 21 நாட்களுக்கு மேலும்,31 நாட்களுக்குள்ளும் செய்யலாம். புத்திரர் வெளிநாடு செல்ல வேண்டுமானால் இத்தினங்கட்கு முன்னதாக அந்தியேட்டி, சபிண்டீகரணம் கிரியைகளைச் செய்ய முடியாது.

மரணக்கிரியை நடைபெற உள்ள இடத்தில், மேலே வெள்ளை கட்டி, மாவிலை, தோரணம், பூச்சரம் முதலியவற்றால் அலங்கரித்து கோமயத்தினால் தரை மெழுகப்பட வேண்டும். கிரியையின் போது தேவார திருவாசகங்கள், திருமுறைகள் ஓதப்படல் வேண்டும். மரணக் கிரியையில் சூர்ணோத்சவம் செய்யப்படும். நடுவில் ருத்திர கும்பம், மேற்குப் பக்கத்தில் புண்ணியமாக வாசன கும்பம். கிழக்குப்பக்கத்தில் உரல், உலக்கை , மணிவாசன கும்பம், கிழக்குப் பக்கத்தில் உரல், உலக்கை. மணி மயானத்துக்குக் கொண்டு செல்லப்படும் மண்குடக் கும்பம் ஆகியவை வைக்கப்படும். இக் கும்பத்தை மயானத்துக்குக்கொண்டு செல்வது வழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தவருக்கு அபிஷேகம் முதலியன செய்யும் பொருட்டு, பிரேதத்தை வீட்டில் தென்புறத்தில், தென்புறம் நோக்கிச் சிரசும், வடக்கு நோக்கிக் கால்களுமாகக் கிடத்தும் சிரசும், வடக்கு நோக்கிகால்களுமாகக் கிடத்துதல்வேண்டும். பின்னர் கிரியை செய்பவர் அரப்பு எண்ணெய் வைப்பார். ஆசௌசகாரரும் அரப்பு எண்ணெய் வைப்பார்கள். பின்னர் அரிசி மா, மஞ்சள்மா, அபிஷேகக்கூட்டு, பால், தயிர், இளநீர், அபிஷேகம் செய்தல்வேண்டும்.

கிரியை செய்பவர் மேற்குமுகமாக நின்று கீழிருந்து மேலாக தனது புறங்கையினால் வேறு ஒருவரின் உதவியுடன் இவ்வபிஷேகம் செய்யப்பட வேண்டும். பின்னர் கும்ப அபிஷேகம், பனனீர் முதலிய வாசனைத் திரவியங்களை சிரசில் சாத்தலாம். பின்னர் திருநீறு கீழிருந்து மேலாகச் சாத்தப்படல் வேண்டும். பின்னர் சுண்ணம் இடிக்கப்படும். அறுகு,மஞ்சள் பொடி என்பவற்றை உரலில் இட்டு மணி அடித்து, 81 பத மந்திரம் சொல்லி எட்டுத்தரும் இடித்த பின்பு, திருபொற்சுண்ணம் பாட்டுப்பாடி சுண்ணம். இடிக்கவேண்டும். சுண்ணப் பொடியை பிரேதத்தின் இரு கண்களிலும் சாத்தி, நீருடன் கலந்து முழு உடலுக்கும் தெளித்து, வழிபடல் வேண்டும்.

பின்னர் பிரேதத்தை மயானத்துக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும். கால்பக்கம் முன்னதாகக் கொண்டு செல்ல வேண்டும். கொள்ளி வைப்பவர் பூதவுடலுக்கு முன் செல்ல, மற்றவர்கள் பின் செல்ல வேண்டும். மயானத்தில் விறகு வடக்குத் தெற்காக அடுக்குதல் வேண்டும். பின் சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல் வேண்டும். பூதவுடலின் சிரசு தென்பக்கம் வைக்கப்படுதல் வேண்டும். பின்னர் கிரியை செய்பவர் மண் குடத்தைத் தன் இடது தோளில் வைத்து, சிதையை இடப்பக்கமாகச் சுற்றி வந்து, காசுடன் வாய்க்கரிசி இட்டு மீண்டும் முன்போல் இடத்தோளில் குடத்தை வைத்து, மூன்றுமுறை சுற்றிவர வேண்டும். ஒவ்வொருமுறைக்கும் கத்தி நுனியினால் துவாரமிட்டு , குடநீர் ஒழுகும்படி செய்து மூன்றாவது முறை முடிவடைந்த பின் , தலைப்பக்கத்தில் தெற்கு முகமாக நின்று கொள்ளியை பிரேதத்தின் சிரசில் வைத்து, குடத்தை முன்புறமாக உடையும்படி போட்டுவிட்டு விழுந்து வணங்கித், திரும்பிப் பாராமல் செல்ல வேண்டும்.

மரணித்தவரும், கிரியை செய்பவரும் மச்ச, மாமிச போசனம் உண்ணாதவர்களாயின் இறந்தவர்களுக்கு மயானத்தில் உடன் அந்தியேட்டி செய்து தகனம் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடாற்று ( சாம்பல் அள்ளல்)

தகனத்திற்கு அடுத்த நாள் அல்லது மூன்றாம் ஐந்தாம் நாள், ஏழாம் ஒன்பதாம் நாட்கள் காடாற்று செய்யலாம்.

தகனம் செய்யப்பட்ட இடத்தை கால் பக்கமாக இருந்து தலை பக்கமாக தண்ணீர் ஊற்றி, அக்கினியை அணைக்கவும். தலைப்பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேக திரவியங்கள் வைக்கவும், மண் கலசத்தில் பால் ஊற்றி அதை ஒரு இடத்தில் வைக்கவும். அங்கு எரிக்கப்பட்ட உடல் எலும்பு மேனியில் முழு உருவமாக இருப்பதாக பாவனை செய்து, கீழிருந்து மேலாக அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகம் செய்யவேண்டும். கிரியை செய்தவர் மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னும் ஒருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்ய வேண்டும் பின்னர் முழங்கால்கள், நாபி, மார்பு, நெற்றி தலை, ஆகிய ஐந்து இடங்களிலும் உள்ள எலும்புகளில் விபூதி, சந்தனம், புஷ்பம் வைத்து சூடம், சாம்பிராணி, தீபம் காட்டி வணங்கி ஐந்து இடங்களில் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் எடுத்து தலைப்பக்கமாக உள்ள பாலுள்ள கலசம்(முட்டி) வைத்து அதை வெள்ளைத் துணியால் மூடிக்கட்டவும், பின்னர் எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் வைக்கவும். பின்னர் அவ்விடத்தைச் சுத்தம் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி றொட்டி (மா, அடை) தாம்பூலம் முதலியவற்றை வைத்துப் படைத்துப் பின்னர் எடுத்த அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம் சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்கு முகமாக நின்று தெற்குப் பக்கமாக போட்டுக் கரைத்துவிடவும்.

கிரியைசெய்தவர் ஸ்நானம் செய்து நக்கினதானம் செய்ய வேண்டும். ஒரு குடத்தில் பச்சை அரிசி நிரப்பி துணியினால் கட்டி விளக்கில் நெய்யூற்றி வெங்கலப் பாத்திரமொன்றில் வைத்து சிவப்பிராமணர் ஒருவருக்கு இறந்தவரின் நிருவாணம், பசி, தாகம் இருள்களை நீக்கி ஆத்மாசாந்தி பெறக் கொடுக்கப்படுகின்றது

அஸ்தியில் ஒரு பகுதி அந்தியேட்டி கிரியைக்காகவோ அல்லத காசி கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் கரைப்பதற்கென எடுத்து வைப்பது தவறாகும்.

## எட்டுச் செலவு / எட்டுக்கிரியை

இது ஒரு நாட்டு வழக்கமாக வந்துள்ளது. தகன தினம் முதல் சபிண்டீகரணம் வரை இறந்தவரது படத்தை வைத்து வீட்டில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் விளக்கேற்றி தண்ணீர் இளநீர் வைத்து நாம் உண்ணும் உணவில் ஒரு சிறு பகுதியை வைத்து சாம்பிராணி தீபம் காட்டி வணங்கி வரும் வழமையும் உண்டு காடாற்றின் பின் எட்டு நாளைக்கு முன்னர் ஒரு தினத்தில் இறந்தவர்க்கு விரும்பிய உணவுகள் அனைத்தும் படைத்து நெருங்கிய உறவினர்களும் அன்று அங்கு சாப்பிடுவார்கள். (சில ஊர்களில் மச்ச மாமிசம் சாப்பிடுபவரென்றாலும் அந்தியேட்டி முடியும் வரை படைப்பதில்லை)

## அந்தியேட்டி/ கல்லெடுப்பு

இறந்த 21 நாட்களுக்கு மேல் 31 நாட்களுக்குள் செய்யப்படும். நதிக்கரையில், குளக்கரையில் அந்தியேட்டி செய்யப்படும். தர்ப்பையில் பிரேத சரீரத்துக்குப் பதிலாக புத்தலிகாவை செய்து தகனம் செய்வார்கள்.

இதைப் புனரத்தகனம் எனக் குறிப்பிடுவார். பின்பு அங்க கல்லு ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம், பூசை செய்து தர்ப்பணம், பிண்டம் ருத்திர பலி பிரபூதபலி (முன்னர் எட்டுக்குச் செய்தல் போல்) செய்யப்படும். இங்கு 30 பிண்டங்கள் இடப்படும். இப் பிண்டங்கள் பச்சை அரிசி சாதம் கறி வகைகள், பலகார வகைகள், பழ வகைகள் பிசைந்து உருட்டி இட வேண்டும. வாஸோதம் (சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம்) செய்யப்படும். இங்கு 525 தர்ப்பணம் செய்யப்படும். இவை ஏகோத்திர விருத்தி என அழைக்கப்படும்.

ருத்திரபலி சிவப்பிரீதியின் பொருட்டுச் செய்யப்படுவது. பின்னர் பாஷாணத்துக்குத் தூப தீபம் காட்டி பூசை முடித்து கும்பம் பாஷாணம் பிண்டம் ஆகியவற்றை நீர்நிலை ஒன்றிற்கு எடுத்துச் சென்று கிரியை செய்தவர் வடக்கு முகமாக இடுப்பளவு தண்ணீரில் நின்று தலைக்கு மேலாகத் தெற்குப் பக்கமாகப் பிண்டத்தையும் கும்பத்தை வடக்கு பக்கமாகவும் பாஷாணத்தை தலைக்கு மேலாக தெற்கு பக்கமாகவும் தண்ணீரில் விட்டு விட்டு அதில் ஸ்நானம் செய்துவிட்டு வீட்டுவாசலை வந்தடைந்து வேப்பிலை தின்று அக்கினி சாணம் மண் வெண்கடுகு ஆகியவற்றைத் தொட்டு வீட்டினுள் செல்வார் கிரியை செய்தவருக்கு ஆரத்தி எடுப்பதும் உண்டு.

## வீட்டுக்கிரியை சபிண்டீகரணம்

வீடு கழுவி சுத்தம் செய்து புண்ணியவாசனம் செய்த பின்னர் வீட்டுக்கிரியை செய்யவேண்டும். அந்தியேட்டிக் கிரியை 30ஆம் நாளும் வீட்டுக்கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாளும் நம்மவர்கள் செய்வது வழமையாக உள்ளது. எமக்கு ஆசௌசம் 30 நாட்கள் அதாவது 31ஆம் நாள் காலையில் ஆசௌசம் முடியும் 30ஆம் நாள் புண்ணியவாசனம் செய்வது சரியல்ல.

வீட்டுக்கிரியை பிரமண ஆசாரியரைக் கொண்டு செய்தல் வேண்டும். முதலில் விக்கினேஸ்வர பூசை புண்ணியவாசனம் பஞ்சகவ்விய பூசை முதலிய கிரியைகளைச் செய்து நவசிராத்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம் மாசிகங்கள் சோதகும்ப சிரார்த்தம் சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.

## ஆட்டைத்திவசம்

முதலாவது வருட முடிவில் இறந்த திதியில் செய்யப்படும் சிரார்த்தம். இத்தோடு அபரக்கிரியைகள் பூர்த்தியாகும். பின்னர் வருடா வருடம் வரும் சிரார்த்த திதியில் சிரார்த்தம் செய்யவும்.

சிரார்த்தம் செய்ய வசதியில்லாதவர்கள் ஆலயம் சென்று பூசை வழிபாடு செய்யலாம்.

## மஹாளயம்

புரட்டாதி மாதத்து அமாவாசைக்கு 15 நாட்கள் மஹாளயம் செய்தல் தந்தை தாய் இருவரும் இறந்திருப்பின் இருவருக்குமாக தனித்தனியே பிண்டமிடல் வேண்டும். இது பிதிர்களுக்கு இராப் போசனமாகும்.

## தநிஷடா பஞ்சமி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் மரணித்தால் பஞ்சமி தோஷமுண்டு. இறந்த வீட்டில் கும்பம் தீபம் ஜலம் வைத்து பசுமாடு கட்டிவைத்து வீட்டில் நெற்பொரி நவதானியம் தூவுதல் வேண்டும. அவிட்ட நட்சத்திரத்துக்கு ஆறுமாதம சதயத்திற்கு மூன்று மாதம். பூரட்டாதிக்கு ஒன்றரை மாதம், உத்திரட்டாதிக்கு ஒரு மாதம், ரேவதிக்கு அரை மாதம் தோஷம் நீங்க பஞ்சமி செய்யவும்.

தாய் தகப்பன் இறந்த ஒரு வருடத்திற்குள் தலயாத்திரை செய்தல் கூடாது. சுப காரியங்களும் செய்தல் கூடாது. இது அபரக்கிரயைகள் பற்றிய சிறு தொகுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்

இன்சுலினை உற்பத்தியாக்காத அல்லது குருதியில் கிடைக்கப்பெறும் இன்சுலினை உடல் பயன்படுத்தாத நிலையே நீரிழிவு நோயாகும். இன்சுலின் என்பது குருதியில் உள்ள சீனியைப் (குளுக்கோசு) பயன்படுத்தி சக்தியை உற்பத்தி செய்யும் ஓமோன் ஆகும். உங்கள் உடலில் உள்ள இன்சுலின் சரியாக வேலை செய்யாதவிடத்தோ குருதியிலுள்ள சீனியின் மட்டம் உயர்ந்து விடும்.

## நீரிழிவு நோய் வந்ததின் அறிகுறிகள்

- ♣ அடிக்கடி சிறுநீர் கழிப்பது
- ♣ அடிக்கடி தாகம்
- ♣ அதிக பசி
- ♣ மிக வேகமாக எடை குறைதல்
- ♣ அதிகமாக சோர்வடைவது
- ♣ கண்பார்வை மங்குதல்
- ♣ வெட்டுக் காயம் / சிராய்ப்புஆகியவை ஆறுவதற்கு அதிக காலம் பிடித்தல்
- ♣ திரும்ப திரும்ப சருமம், ஈறு மற்றும் சிறுநீர்ப்பையில் தொற்று

நீரிழிவினால் ஏற்படும் சிக்கல்களுள் பல குருதிச்சீனியுடன். தொடர்புடையவையே. உங்கள் குருதிச் சீனியை பாதுகாப்பு மட்டத்திற்குக் கீழே வைத்துக்கொள்வதுதான், இப்படியான சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த வழியாகும். உங்களுக்கு நீரிழிவு இருக்குமானால் உங்கள் குருதிச் சீனியை மட்டுமல்லாது உங்கள் குருதியமுக்கமும், கொலஸ்ற்ரோல் என்பவற்றையும் கட்டுபாட்டில் வைத்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவினால் ஏற்படும் சிக்கல்கள்

- குருட்டுத் தன்மை
- சிறுநீரக நோய்
- உடல் உறுப்புக்களை அகற்றல்.
- ஆண்மை வீரியம் குறைதல்

## உங்களுக்கு நீரிழிவு இருப்பின் நீங்கள் செய்ய வேண்டியவை

- உங்கள் குருதிச்சீனி மட்டத்தை பாதுகாப்பு வரையறையை விட குறைவாக வைத்திருங்கள்.
- புகைபிடிப்பதை விட்டு விடுங்கள்.
- குருதியமுக்கத்தையும், கொலஸ்ற்ரோல் மட்டத்தையும் சோதித்துப் பார்த்து அவற்றை நல்லகட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள்.
- ஆரோக்கியமான சமவலுவடைய ஆகாரத்தை உண்ணுங்கள்.
- ஒழுங்காக உடற்பயிற்சி செய்யுங்கள்.
- பாதங்களில் மிகச் சிறியதான வெட்டுக்காயங்களோ அல்லது கொப்பளங்களோ காணப்படுகின்றனவா என ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொள்ளுங்கள்.
- ஒழுங்காக உடற்பயிற்சி செய்யுங்கள். (பிரச்சினைகள் ஏதும் உள்ளனவா எனக் கண்டறிவதற்காக)
- மருந்துகளை கிரமமாக எடுத்துக் கொள்ளுங்கள்.
- நீரழிவு பற்றி மேலும் அறிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருதயத் தாக்குகைக்கும் மூளைத்தாக்குகைக்குமான அபாய ஆபத்துக் காரணிகள்

- புகைபிடித்தல்
- உயர் குருதி அமுக்கம்
- உயர் குருதிக் கொலஸ்ற்ரோல்
- நீரிழிவு
- மிகை எடையோராயிருத்தல்
- உடலியக்க ரீதியான சுறுசுறுப்பின்மை
- வாழ்க்கையில் மன நெருக்குவாரம் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவரிடையே ஏற்படும் இருதயத்தாக்குகையும், முளைத்தாக்குகையும்
- மூப்படைதல்

## இருதயத்தாக்குகையையும் மூளைத்தாக்குகையும் தடுப்பதற்காக நீங்கள் எடுக்கக்கூடிய பிரதான படிமுறைகள் பின்வருமாறு

- புகைபிடிப்பவராயின் புகைபிடிப்பதை முற்றாக நிறுத்துங்கள்
- உயர் குருதியமுக்கத்தைச் சோதித்துப் பார்த்துக் கொள்க. அது உயர்வாக இருப்பின் குறைவான நிலையில் பேணிக் கொள்ளுங்கள்.
- உங்கள் கொலஸ்ற்ரோல் மட்டத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் அது உயர்வாயின் பாதுகாப்பான எல்லை (வரையறை)க்குக் கீழே பேணிக் கொள்ளுங்கள்.
- உங்கள் குருதியிலுள்ள சீனியின் அளவைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு நீரிழிவு நோயாளியாயின் உங்கள் குருதிச்சீனியின் அளவை நல்ல கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் உயரத்துக்கு சரியான உடல் எடையைப் பேணிக் கொள்ளுங்கள்
- சுறுசுறுப்பான உடலியல் இயக்கச் செயற்பாடுகள் கொண்டவராக இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இருதயத்துக்கு நேயமான சமவலுவுள்ள ஆகாரத்தை உண்க.
- உங்கள் வாழ்விலுள்ள மன உளைச்சலைக் குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

## இருதயத் தாக்குகை பின்வரும் அறிகுறிகளோடு வரக்கூடும்

- மேலான அசெளகரியம், அழுத்தம் அல்லது சில நிமிடங்களுக்கு நடுமார்பை அமுக்குவது போன்ற உணர்வு
- கழுத்தில், தாடையில், புஜங்களின் மேற்புறம், வயிறு போன்றவற்றில் உண்டாகும் அசெளகரியம்.
- மூச்சுவிட சிரமப்படுதல்.
- மயக்க உணர்வு, தலைச்சுற்றல், பயத்துடன் கூடிய பதற்றம்.
- உங்கள் இருதயம் அதிவேகத்துடன் துடிக்கும் உணர்வு இவ்வாறான ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் தாமதியாது அருகில் உள்ள வைத்தியசாலையை நாடவும்.

## மூளைத்தாக்குகையினதும், TIA (Transo Ischaemic Attacks) யினதும் அறிகுறிகளாவன.

- ஒரு புறத்து முகம், கை, கால் என்பன திடீரென மரத்துப் போதல் அல்லது பலவீனமடைதல்
- கதைப்பதில் திடீரென சிரமம் உண்டாதல், பேச்சுத் தெளிவற்றுப் போதல், அல்லது புரிந்து கொள்வதில் சிரமப்படுதல்
- பார்வை திடீரென மங்கிப்போதல்
- திடீரென தோன்றும் தீவிரமான தலையிடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எமது பாசத்தின் உறைவிடமாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் தந்தை அமரர் குட்டிப்பிள்ளை பரமலிங்கம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து எமக்கு பலவகையிலும் உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், கிராமத்தவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், இரங்கல் செய்தி வழங்கியோருக்கும்,மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும். அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளைச் செய்த குருமாருக்கும், துண்டுப்பிரசுரம், பதாகைகள் [பெனர்] மூலம் தங்கள் துயரங்களைப் பகிர்ந்து கொண்டோருக்கும். அந்தியேட்டி அழைப்பு மற்றும் இந்நூலை வெளியிட்டு உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும் மதியபோசன நிகழ்வில் பங்குபற்றியோருக்கும் இறுதிக்கிரியைகள் சிறப்புற பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் என்றென்றும் மறவாத நன்றியறிதலை மனப்பூர்வமாகச் சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

*** குட்டிப்பிள்ளை + * சின்னத்தங்கம்**

↓

- * அன்னப்பிள்ளை + * செல்லம்
- * நாகம்மா + கைலாயப்பிள்ளை
- * கந்தையா + பொன்னம்மா
- * இராமநாதர் + தெய்வானைப்பிள்ளை
- * நாகலிங்கம் + சின்னம்மா
- பொன்னம்மா + * நாகேந்திரம்
- * தருமலிங்கம் + அந்தோனியாப்பிள்ளை
- * மயில்வாகனம் + அன்னக்கிளி
- * பரமலிங்கம்
- பராசக்தி + * சுப்பிரமணியம்
- இராசமணி + * இரகுநாதன்

*** சுப்பிரமணியம் + * மாரிமுத்து**

↓

- * மார்க்கண்டு + கண்மணி
- பராசக்தி + * முருகேசு
- * தருமலிங்கம் + அன்னலட்சுமி
- புஸ்பராணி + * இராசையா
- * வைத்தியலிங்கம் + சுகுணமலர்
- மகேஷ்வரி

**பரமலிங்கம் + மகேஷ்வரி**

↓

- நிர்மலாதேவி + சுமித்திரன் → சுபித்தா
- தர்மரட்ணம்(சாந்தன்) + நீத்தா → சஞ்சீவ், சாரு
- யசோதா + பொன்னவராஜன் → பிரகலாதன், பிரதீபா, கபில்
- விஜிதா + தவக்குமார் → அரவிந், கீர்த்தனா
- அரவிந்தன்(இந்து) + யாழினி → பிரவின், ரிஷ்வின்
- ரமேஷ்வரன் + பிரியதக்ஷி

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகப் பாடல்

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க...
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க.....
நீரில் மிதந்திடும் கணகளும் காய்க....
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க.....
ஜனனமும் பூமியில் புதியது இல்லை....
மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை...
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை...
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை....
பாசம் உலாவிய கணகளும் எங்கே....
பாய்ந்து துளாவிய கைகளும் எங்கே....
தேசம் அளாவிய கால்களும் எங்கே....
தீ உண்டது என்றது சாம்பலுமிங்கே.....
கண்ணில தெரிந்தது காற்றுடன் போக....
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க்க....
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக...
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க...
பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை.....
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை....
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை....
மறதியைப் போலொரு மாமருந்தில்லை....
கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை....
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை....
நதி மழை போன்றதே விதி என்றும் கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன.....
மரணத்தினால சில கோபங்கள் தீரும்.....
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்.....
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்....
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்....
பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்....
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்....
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்....
தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்....
சூரிய கீற்றொளி தோன்றிடும் போதும்....
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்....
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்.....
மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க்க....
தூயவர் கண்ணொளி சூரியன் சேரக்க....
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க்க....
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க்க.....

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org